AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 3 PRINTED SIZE: 285.00cm² REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 1,465.00 ITEM ID: MY0059675996



11 JUL, 2024

## RM3.4b loss from illicit Bitcoin mining activities

Tamil Malar, Malaysia



# பிட்காய்ன் சுரங்க நடவடிக்கையால் நாட்டிற்கு வெ.340 கோடி இழப்பு!



**நமது நிருபர்**

ஸ்ரீ கெம்பாஙான், ஜூலை 11– நாட்டில் மிகவும் பரவலாக மேற்கொள்ளப்படும் பிட்காய்ன் சுரங்க நடவடிக்கையில் எரிசக்தி திருடப்படுவதால் 5 ஆண்டு காலத்தில் வெ.340 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த இழப்பு கடந்த 2018 தொடங்கி 2023ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் டிஎன்பி மற்றும் எரிசக்தி ஆணையமும் சேகரித்தத் தரவுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டதாகும் என்று எரிசக்தி மாற்றம் மற்றும் தண்ணீர் உருமாற்றத்திற்கான துணை அமைச்சர் அக்மால் நஸ்ருல்லா முகமட் நாசிர் தெரிவித்தார்.

ஒட்டுமொத்த எரிசக்திப் பயன்பாட்டுடன் ஒப்பிடுகையில் இந்த இழப்பு சிறு விகிதத்தில் இருந்த போதிலும் இழப்பீட்டின் மதிப்பு நாட்டிற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

அந்த வகையில் நாட்டிற்கு இதனால் பில்லியன் வெள்ளி கணக்கில் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதில் மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருப்பது கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பிட்காய்ன் சுரங்க நடவடிக்கையினால் ஏற்பட்ட வெ.340 கோடி இழப்பாகும்.

அதே சமயம் மின்சார மீட்டரை மாற்றியமைத்தல், சட்டவிரோத மின்சார இணைப்புக்கு வீடு பகிர்வு செய்தல் ஆகிய திருட்டுச் சம்பவங்கள் நிகழ்கின்றன. இவற்றை முறியடிப்பதற்கான சோதனை நடவடிக்கைகளும் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன.

இருந்த போதிலும் பிட்காய்ன் சுரங்க நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்படுவதைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும் என்று பலாக்கோங், தாமான் இண்டஸ்ட்ரி செலேசா ஜெயாவில் உலோகத் திணிப்பு மற்றும் அகற்றும் மையத்தில் எரிசக்தி ஆணையத்தின் பறிமுதல்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது ஜோகூர்பாரு நாடாளுமன்ற உறுப்பினருமான அக்மால் நஸ்ருல்லா முகமட் நாசிர் குறிப்பிட்டார்.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.